DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.35/2025

PW - 9

| | | |
|---|---|---|
| Name | : | சேகர் (Lw - 11) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 17.04.2026**

நான் கடைசியாக நாமக்கல் மாவட்ட குற்ற பிரிவில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.01.2023ம் தேதி விருப்ப ஓய்வு பெற்று தற்போது எருமப்பட்டியில் குடியிருந்து வருகிறேன்.

எருமப்பட்டி காவல்நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.கருணாநிதி என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது கடந்த 13.02.2021ம் தேதி மதியம் சுமார் 13.30 மணியளவில் நாமக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற பூங்கொடி என்பவரது அடிதடி தகவலை பெற்று நாமக்கல் அரசு மருத்துவமனை சென்று புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.158/2021 இதச சட்ட பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை புகார் வாக்குமூலத்துடன் கனம் நீதிமன்றத்திற்கும் ஒரு நகலை உரிய அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை எனது புலன் விசாரணைக்காக வைத்தார்.

மேற்படி வழக்கை நான் எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 13.02.2021ம் தேதி மாலை 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள்

ராஜேந்திரன், ராமராசு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **(**மாதிரி வரைபடம் அ**.**சா**.**ஆ**.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து சம்பவத்திற்கு பயன்படுத்திய மண்வெட்டி ஒன்றினை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். பின்பு கைப்பற்றப்பட்ட மண்வெட்டியை படிவம் 91ன் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(**படிவம் **91** அ**.**சா**.**ஆ**.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்னர் சாட்சிகள் பூங்கொடி, விசித்திரா, பச்சமுத்து, ராமசாமி, முத்தம்மாள், ராஜேந்திரன், ராமராசு ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்பு நான் பணிமாறுதல் காரணமாக வழக்கு கோப்புகளை எருமப்பட்டி காவல் உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் திரு.பெரியசாமி என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இவ்வழக்கில் சம்பவம் குறித்த தகவலானது சம்பவம் நடந்து மூன்று நாட்கள் கழித்துதான் தெரியவந்தது என்றால் சரிதான். சாட்சி - 2 விசித்திரா வாதி பூங்கொடியின் மகள் என்றால் சரிதான். 1ம் எதிரிக்கும் சாட்சி - 2 விசித்திராவிற்கும் சம்பவத்தின் போது விவாகரத்து வழக்கு நிலுவையில் இருந்து வந்தது என்றால் சரிதான். வாதி பூங்கொடி எதிரிகளின் வீட்டிற்கு சென்று அவர்களிடம் தகராறு செய்தது சம்மந்தமாக எதிரி தரப்பில் புகார் அளிக்கப்பட்டது என்றால் நான் விசாரணையில் தெரிந்துகொண்டேன்.

இவ்வழக்கில் நான் இறுதி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியை எதிரிகள் அடிக்கவில்லை என்றாலும் வாதி கொடுத்த பொய்யான புகாரின் பேரில் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**